**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 131** **நாள்: 12.09.2016**

## பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கொரட்டூர் பகுதிகளில் “ஸ்கைரோனமஸ் பூச்சி” தொல்லையை ஒழிக்க தொடர் நடவடிக்கை !

------

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–7, அம்பத்தூர் பகுதியில் கோட்டம்–82 (ம) 83 பகுதிகளில், ஏரிகளின் கரையோர பகுதிகளில் நீர்நிலைகளில் இருந்து மாலை நேரங்களில் ஸ்கைரோனமஸ் வகை பூச்சிகள் வெளிப்படுகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மேற்கண்ட இடத்தை நேற்று (11.09.2016) மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு.சைதை துரைசாமி அவர்கள், மக்கள் நல்வாழ்வு (ம) குடும்பநலத்துறை முதன்மை செயலாளர் டாக்டர்.ஜெ.இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப. அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப. அவர்கள், சட்டமன்ற உறுப்பினர், துணை ஆணையர் (சுகாதாரம்) திரு.ஆர்.கண்ணன், இ.ஆ.ப. அவர்கள், வட்டார துணை ஆணையர் (மத்தியம்) டாக்டர்.சுபோத்குமார், இ.ஆ.ப. அவர்கள் ஆகியோர் பார்வையிட்டனர்.

இன்று (12.09.2016) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மருத்துவர். சி.விஜய பாஸ்கர் அவர்கள், மக்கள் நல்வாழ்வு (ம) குடும்பநலத்துறை முதன்மை செயலாளர் டாக்டர்.ஜெ.இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்கள்.

அவர்களின் பரிந்துரையின்படி, பூச்சிகளை கட்டுப்படுத்த கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. 60 கைத்தெளிப்பான்கள், 21 புகைப்பரப்பும் இயந்திரங்கள், 4 வாகனங்கள் மூலமாக பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் புகைப்பரப்பும் இயந்திரங்கள் மூலம் வீடு வீடாக சென்று மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. மேலும், 2 பைபர் கட்டுமரம் மூலம் இப்பூச்சிகள் தங்கும் நீர்நிலைகளில் உள்ள செடிகளை அப்புறப்படுத்தும் பணியிலும் 78 நபர்கள் கொண்டு பணி நடைபெற்று வருகின்றது.

இப்பணியில், பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் மண்டல நல அலுவலர்கள், பூச்சியல் வல்லுநர்கள், துப்புரவு அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள், அடிப்படை சுகாதார பணியாளர்கள் மற்றும் அனைத்து துறை பணியாளர்கள் குழுக்களாக பிரிந்து முழுவீச்சில் பணி மேற்கொண்டு வருகிறார்கள்.

மேலும், இப்பூச்சிகளினால் எந்த நோய்களும் பரவாது. இவை மக்களுக்கு தொல்லை மட்டுமே கொடுக்கக்கூடியவை. நேற்று (11.09.2016) இப்பூச்சிகளை கட்டுப்படுத்த 200 வாத்துக்கள் தமிழக கால்நடைத்துறையினரால் அந்த ஏரியில் விடப்பட்டது.

இப்பூச்சிகள் எளிதாக மின் விளக்குகளால் கவரக்கூடியவை என்பதால், பெருநகர சென்னை மாநகராட்சி மின்துறையின் மூலம் ஆங்காங்கே மின் விளக்குகள் பொருத்தப்பட்டு, இப்பூச்சிகள் குடியிருப்பு பகுதியில் நுழையாத வண்ணம் தடுக்கப்பட்டுள்ளது.

இந்தமேல் நடவடிக்கைகளால் ஸ்கைரோனமஸ் வகை பூச்சிகள் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணி முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**